ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
தொலைபேசி : 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
| திகதி | 2020 செத்தெம்பர் 16 |

## இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு) – 2020 ஓகத்து

**தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகள் இரண்டிற்குமான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள் 2020 ஓகத்தில் விரிவடைந்தன.**

**தயாரிப்பு கொ.மு.சு சுட்டெண் பெறுமதி 57.9**

2020 யூலையுடன் ஒப்பிடுகையில் 6.7 சுட்டெண் புள்ளிகள் கொண்ட வீழ்ச்சி

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் மூலம் பிரதிபலிக்கப்பட்டவாறு, நாட்டில் தொழில் நடவடிக்கைகள் இயல்புநிலைக்கு திரும்புவதிலிருந்து பயனடைந்து தயாரிப்பு நடவடிக்கைகள் 2020 ஓகத்தில் தொடர்ந்தும் மீட்சியடைந்தன. புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தி துணைச் சுட்டெண்கள் 2020 ஓகத்தில் விரிவடையும் மட்டத்தில் காணப்பட்ட அதேவேளை தொழில்நிலை துணைச் சுட்டெண்ணில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது.

தயாரிப்பு நடவடிக்கைகளின் விரிவடைதலுக்கு உணவு மற்றும் குடிபானத் துறை தயாரிப்பு பிரதானமாக ஆதரவளித்திருந்தது. எதிர்வருகின்ற பருவகால கேள்விகளுக்கான எதிர்பார்ப்புடன் தாம் புதிய ஊழியர்களை ஆட்சேர்த்துள்ளதாக இத்துறையின் சில பதிலிறுப்பாளர்கள் எடுத்துக்காட்டினர்.

கொள்வனவுகளின் இருப்பானது உற்பத்தி மற்றும் புதிய கட்டளைகளின் போக்குகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் மெதுவான வீதத்தில் விரிவடைந்தது. நேரடி கப்பற்படுத்தல் பணிகள் கிடைக்கப்பெறாமை போன்ற ஏற்பாட்டுச் சேவைகளில் காணப்பட்ட சிக்கல்களின் காரணமாக நிரம்பலர் விநியோக நேரம் தொடர்ந்தும் உயர்வான வேகத்தில் நீட்சியடைந்தது.




மூலம்: இலங்கை மத்திய வங்கி

| மாறி | யூலை | ஓகத் | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **64.6** | **57.9** | **-** | **அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில்** |
| | | **கொ.மு.சு துணைச்சுட்டெண்கள்** | | |
| புதிய கட்டளைகள் | 69.5 | 58.5 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| உற்பத்தி | 73.7 | 57.5 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 51.6 | 54.0 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| கொள்வனவுகளின் இருப்பு | 61.6 | 57.5 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| நிரம்பலாளர்களின் விநியோக நேரம் | 58.9 | 62.5 | + | நீட்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அத்துடன், பொறித்தொகுதிகளின் பாகங்கள் உள்ளடங்கலாக சில வகையான பொருட்களின் இறக்குமதிகள் மீது விதிக்கப்பட்டிருந்த தொடர்ச்சியான தடைகள் தயாரிப்பு நடவடிக்கைகளின் சீரான தொழிற்பாட்டினை வெகுவாகப் பாதித்தன என பதிலிறுப்பாளர்கள் எடுத்துக்காட்டியிருந்தனர்.

அடுத்துவரும் மூன்று மாதங்களுக்குமான தயாரித்தல் நடவடிக்கைகளுக்கான ஒட்டுமொத்த எதிர்பார்க்கைகள் மேம்பட்டன. இருந்தபோதிலும், ஒப்பீட்டளவில் குறிப்பாக வெளிநாட்டு பக்கங்களிலிருந்து பலவீனமான கேள்வியானது கொவிட் நோய்ப்பரவலுக்கு முன்னர் காணப்பட்ட மட்டங்களை அடைவதிலிருந்து அவர்களை தடுக்கின்றதென தயாரிப்பாளர்கள் இன்னும் கரிசனை கொண்டுள்ளனர்.

### *உலக தோற்றப்பாடு: தயாரிப்பு கொ.மு.சு*

உலகளாவிய தயாரிப்பு கொ.மு.சு 2020 யூலையிருந்து 1.2 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்புடன் 2020 ஓகத்தில் 51.8 இனைக் கொண்ட பெறுமதியொன்றினைப் பதிவுசெய்தது.

கொவிட் - 19 இற்கு மத்தியில் முடக்கல் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதன் பின்னர் 2020 ஓகத்தில் ஐக்கிய இராச்சியம், சீனா, ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய வலய நாடுகளின் தயாரிப்பு கொ.மு.சு தொடர்ந்தும் விரிவடைந்த அதேவேளை இந்தியா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளின் தயாரிப்பு கொ.மு.சு சதகமான மட்டத்திற்கு மீட்சியடைந்தது.

*மூலம்: மார்க்கிட்[1], 2020 செத்தெம்பர் 15 இல் உள்ளவாறு*

*1 மார்க்கிட் நிறுவனமானது நிதியியல் தரவுப் பணிகள் தொடர்பான முன்னிலையான உலக பன்முகத்தன்மை வாய்ந்த வழங்குநராகும். இது உலக கொ.மு.சு தொகுப்பாளராக அடையாளங்காணப்படுவதுடன் யூரோ வலயம் போன்ற முக்கிய பிரதேசங்கள் உள்ளடங்கலாக 30க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு கொ.மு.சு இனை தொகுக்கின்றது.*

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்ணானது 2020 ஓகத்தில் 56.0 இனை அடைந்ததன் மூலம் பணிகள் துறையானது தொடர்ச்சியாக மூன்றாவது மாதமாகவும் தொடர்ந்தும் விரிவடைந்தது.** பணிகள் துறை நடவடிக்கைகள் உலகளாவிய நோய்த்தொற்றுக்கு முந்திய மட்டங்களுக்கு படிப்படியாக மீட்சியடைவதனை எடுத்துக்காட்டி 2020 யூலையுடன் ஒப்பிடுகையில் புதிய வியாபாரங்கள், வியாபார நடவடிக்கைகள் மற்றும் நடவடிக்கைக்கான எதிர்பார்க்கைகள் என்பவற்றில் அவதானிக்கப்பட்ட விரிவடைதல்கள் மூலம் இது துணையளிக்கப்பட்டிருந்தது.

பொருளாதார நடவடிக்கைகள் படிப்படியாக மீட்சியடைதலுடன் புதிய வியாபாரங்கள், குறிப்பாக நிதியியல் பணிகள் மற்றும் காப்புறுதி மற்றும் போக்குவரத்துத் துணைத் துறைகளிலுள்ளவை 2020 ஓகத்தில் மேம்பட்டன.

வியாபார நடவடிக்கைகளின் துணைச் சுட்டெண்ணானது அடுத்தடுத்து நான்காவது மாதமாகவும் அதிகரித்ததுடன் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் பணிகள் துறை நடவடிக்கைகளில் துரித மீட்சியொன்றினைக் காண்பித்து 66.7 இனை அடைந்தது. முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2020 ஓகத்தில் ஆடை மற்றும் மருத்துவப் பாதுகாப்பு முகக்கவசங்கள் ஏற்றுமதிகளில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்பிற்கு இசைவாக போக்குவரத்துத் துணைத் துறையின் வியாபார நடவடிக்கைகள் மேம்பட்டன. மேலும், 2020 ஓகத்தில் ஊக்குவிப்புக்கள் ஊடாக அதிகளவான உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளை தாம் ஈர்க்கக்கூடியதாகவிருந்தது என தங்குமிடம், உணவு மற்றும் குடிபான துணைத் துறையிலுள்ள பதிலிறுப்பாளர்கள் எடுத்துக்காட்டினர். மேலும், நிதியியல் பணிகள் மற்றும் வேறு தனியாள் பணிகள் துணைத் துறைகளுடன் தொடர்புபட்ட வியாபார நடவடிக்கைகளும் மாதகாலப்பகுதியின் போது அதிகரித்தன.

கேள்வியில் ஏற்படும் ஏதேனும் அதிகரிப்பினை ஏற்கனவே காணப்படுகின்ற இயலளவினைக் கொண்டு நிறைவேற்றக்கூடியதாகவிருக்கும் என்பதனை எடுத்துக்காட்டி நிலுவையிலுள்ள பணிகள் தொடர்ந்தும் எதிர்மறையான மட்டத்தில் காணப்பட்டது.

அதற்கமைய, புதிய ஆட்சேர்ப்புகள் நிறுத்தப்பட்டமைக்கு மத்தியில் ஒப்பந்த ஊழியர்களின் பணி உடன்படிக்கைகள் நீடிக்கப்படாமையின் காரணமாக தொழில்நிலையானது 2020 ஓகத்தில் வீழ்ச்சியடைந்தது.

| மாறி | யூலை | ஓகத் | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **51.4** | **56.0** | **+** | **அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில்** |
| | | **கொ.மு.சு துணைச்சுட்டெண்கள்** | | |
| புதிய வியாபாரங்கள் | 53.5 | 58.3 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| வியாபார நடவடிக்கை | 61.0 | 66.7 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| நிலுவையிலுள்ள பணி | 36.8 | 45.8 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 40.0 | 38.2 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் | 65.5 | 70.8 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அதேவேளை, எதிர்வருகின்ற காலப்பகுதியின் போது பொருளாதார நடவடிக்கைகள் புத்துயிர் பெறுதல் மற்றும் அரசியல்சார்ந்த உறுதிப்பாடு என்பன பற்றிய சாதகமான எண்ணப்பாங்குகளின் காரணமாக 2020 ஓகத்தில் எதிர்கால வியாபார நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் அதிகரித்தன.

**பணிகள் கொ.மு.சு**
**சுட்டெண் பெறுமதி**
**56.0**

**2020 யூலையுடன் ஒப்பிடுகையில் 4.6 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பு**

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

***உலக தோற்றப்பாடு: பணிகள் கொ.மு.சு***

உலகளாவிய தயாரிப்பு கொ.மு. சுட்டெண்ணானது 2020 யூலையிருந்து 50.6 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்புடன் 2020 ஓகத்தில் 51.9 இனைக் கொண்ட ஏழு மாத உயர்வொன்றுக்கு அதிகரித்து உலகளாவிய பணி நடவடிக்கைகளில் தொடர்ச்சியாக இரண்டாவது மாதத்திற்காகவும் விரிவொன்றினை சமிக்ஞைப்படுத்துகின்றது.

முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2020 ஓகத்தில் ஐக்கிய அமெரிக்கா, சீனா மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளின் பணிகள் துறை விரிவடைந்துள்ளன என்பதனை அந்நாடுகளின் பணிகள் கொ.மு.சுட்டெண் குறித்துக்காட்டிய அதேவேளை யப்பான் மற்றும் இந்தியா ஆகியவற்றின் சுட்டெண்கள் வீழ்ச்சியொன்றினை எடுத்துக்காட்டின.

*(மூலம்: மார்க்கிட்[1], செத்தெம்பர் 15, 2020 இல்*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது “வியாபித்தல் சுட்டெண்ணாக” கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

| | |
|---|---|
| கொ.மு.சு=50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது. |
| கொ.மு.சு >50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது. |
| கொ.மு.சு <50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது. |

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | |
|---|---|
| தொழில்நிலை | : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.